**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்**

**முன்னிலை : திருமதி.எஸ்.சப்னா, பி.பி.எம்., எல்.எல்.எம்.,**

**நீதித்துறை நடுவர், பல்லடம்.**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் நாள் வியாழக்கிழமை**

**முதல்நிலை பதிவேட்டு வழக்கு எண்.5/2026**

**CNR No : TNTI 11–000235–2026**

அரசுக்காக: காவல் ஆய்வாளர்,

பல்லடம் காவல் நிலையம்,திருப்பூர்,

குற்ற எண்.1204/2025,

சட்டப்பிரிவுகள்331(3),309(4),111(2)(b)BNS .

... புகார்தாரர்

/எதிர்/

1) பிரபு(வயது 43),
த/பெ.ராஜி,
2106, அரன்கரை தெரு,
செட்டிமண்டபம்,
உள்ளூர், கும்பகோனம்,
தஞ்சாவூர்,
தற்போது
வள்ளியாத்தாள் காம்பவுன்ட்,
எபி நகர், நொச்சிபாளையம்,
வீரபாண்டி போஸ்ட்,
திருப்பூர்.

2) ஹீசைன் முகமது,(வயது 43)
த/பெ.ராஜாமுகமது,
1498/27, முல்லை நகர்,
செட்டிமண்டபம்,
கும்பகோணம்,
தஞ்சாவூர்.

... எதிரி 1 மற்றும் 2 வரை.

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் கடந்த 31.01.2026 ஆம் தேதியன்று PRC.No.5/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு இதுநாள் வரை பரிசீலனையிலிருந்து வந்து இறுதியாக

இன்று விசாரணைக்கு வந்தபோது அரசுதரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை எண்.1 திரு. S.செந்தில்குமார், அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் எதிரிகள் ஆஜராகியும் இறுதியாக இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கும்...

## உத்தரவு

1) கடந்த 29.11.2025 ஆம் தேதி மதியம் சுமார் 14.30 மணியளவில் பல்லடம் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட கரையாம்புதூர் இடுவாய் தோட்டம் பெங்கேயன் கவுண்டன்புதூரில் குடியிருக்கும் வாதி நாச்சம்மாள் என்பவர் அவரது வீட்டில் தனியாக இருந்த போது 1 ஆம் எதிரி பிரபு மற்றும் 2 ஆம் எதிரி உசேன் முகமது ஆகிய இருவரும் TN 42 AM 0920 என்ற எண்ணுள்ள பிளாட்டினா இருசக்கர வானத்தில் வாதியின் வீட்டிற்கு அருகில் சென்று இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு குற்றமுறு எண்ணத்துடன் பகல் நேரத்தில் கொள்ளையடிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் வாதி நாச்சம்மாள் வீட்டிற்கு சென்றுள்ளார்கள்.

2) மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 1 ஆம் எதிரி பிரபு மற்றும் 2 ஆம் எதிரி உசேன் முகமது ஆகிய இருவரும் வாதியின் வீட்டிற்குள் சென்று எதிரி பிரபு அவரது கையால் வாதி நாச்சம்மாளின் வாய் பகுதியை அழுத்தி பிடித்து நாச்சம்மாள் அவரது கழுத்தில் அணிந்து இருந்த ரூ75,000/- மதிப்புள்ள நாச்சம்மாளின் சுமார் 71/2 புவன் எடையுள்ள தங்க செயினையும் வாதி அவரது கைகளில் போட்டிருந்த 50,000/- மதிப்புள்ள சுமார் 5 பவுன் எடையுள்ள இரண்டு வளையல்களையும் கொள்ளையடித்தும், மேலும் 2 ஆம் எதிரி உசேன் முகமது வாதி நாச்சம்மாள் அவரது இடது கை மோதிர விரலில் போட்டிருந்த ரூ.5000/-ரூபாய் மதிப்புள்ள சுமார் ½ பவுன் எடையுள்ள ஒரு தங்க மோதிரத்தை கொள்ளையடித்துள்ளார்.

3)மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக 1 ஆம் எதிரி பிரபு மற்றும் 2 ஆம் எதிரி உசேன் முகமது ஆகிய இருவரும் பல குற்ற வழக்குகளில் சிறைக்கு சென்றுவிட்டு வெளியே வந்து மீண்டும் மீண்டும் இதே போன்ற குற்றச்செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டுள்ளார்கள்.

எனவே எதிரிகள் செய்த குற்றச் செயலுக்கு எதிரிகள் மீது 331(3),309(4),111(2)(b)BNS ன் கீழ் அரசு தரப்பில் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இவ்வழக்கில் எதிரிகள் ஆஜரான பின்பு வழக்கின் ஆவணங்கள் அனைத்தும் 230 BNSS ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

5) ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் இவ்வழக்கின் எதிரிகள் மீது பிரிவுகள் 331(3),309(4),111(2)(b)BNS ன் கீழான குற்றச்சாட்டுகள் மேன்மைமிகு அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கது என்பதால் இவ்வழக்கினை மேல் விசாரணைக்காக திருப்பூர், மேன்மைமிகு முதன்மை மாவட்ட மற்றும் முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு 232 BNSS-ன் கீழ் சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது..

6)இவ்வழக்கின் கோப்புக்களை மேல் விசாரணைக்காகவும், மேல் நடவடிக்கைக்காகவும் மேன்மைமிகு திருப்பூர் முதன்மை மாவட்ட மற்றும் முதன்மை அமர்வு நீதிமன்றத்திற்கு குவிமுச பிரிவு 232(c) BNSS ன் கீழ் சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

7) இவ்வழக்கு கோப்பு மேல் விசாரணைக்காக சமர்ப்பிக்கப்பட்டது குறித்து திருப்பூர் அரசு குற்றத்துறை வழக்குரைஞருக்கு 232(d) BNSS-ன் கீழ் அறிவிப்பு அனுப்ப உத்தரவிடப்படுகிறது.

8) இவ்வழக்கின் எதிரிகளிடம், திருப்பூர், மேன்மைமிகு முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் வழக்குரைஞர் வைத்து வாதாட வசதி உண்டா? என்று வினவியபோது 1 ஆம் எதிரி வசதி உள்ளது என்று கூறினார் மேலும் 2 ஆம் எதிரி வசதி இல்லை என்பதால் இலவச சட்ட வழக்கறிஞர் வேண்டும் என்று மனு கொடுத்துள்ளார்..

9) திருப்பூர், மேன்மைமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு மேல் விசாரணைக்காகவும், மேல் நடவடிக்கைக்காகவும் வருகின்ற 18.03.2026 ஆம் தேதியன்று தவறாமல் ஆஜராக வேண்டுமென்று எதிரிகளுக்கு தெரிவிக்கப்பட்டது.

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, மீண்டும் என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாள் வியாழன்கிழமை என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

S SAPNA
Digitally signed by S SAPNA
Date: 2026.03.05 17:41:52 +0500

நீதித்துறை நடுவர்,
பல்லடம்.

<u>**நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது**</u> :

மேன்மைமிகு தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர், திருப்பூர்.